விலை சதம் 10

# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, வைகாசி 1 உ வெள்ளி (15-5-70) ற. அவ்வல் பிறை 8 — புத்தகம் 24 இதழ் 37

## ஜீ. ஜீ. இம்முறை மண் கவ்வுவது நிச்சயம்!

### புள்ளி விபரம் கூறுகிறது இப்படி!

(நமது நிருபர்)

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1947 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் சின்னத்தோடு போட்டியிடுகின்ருர். இதுவரை நடந்த ஆறு பொதுத் தேர்தல்களின் நிலையையும் கவனித்தால் ஜீ. ஜீ. எப்படி மண் கௌவிவருகிருர் என்பது புரியும்.

இதோ ஜீ. ஜீ. யின் வீழ்ச்சி யுறும் காதை:

1947—மொத்த வாக்காளர் 42548

(4-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழர் சிங்களவராக மாறத்தான் வேண்டும்'

## இப்படிச் சொல்கிருர் பீட்டர் கெனமன் இதற்கு வி.பொன்னம்பலத்தின் பதில் என்ன?

கொழும்பு, மே 14

"பெரும்பான்மை இனத்தால் பேசப்படும் ஒரு மொழி சிறுபான்மையோரின் மொழியாக ஆகத்தான் வேண்டும். இதில் ஒன்றும் புதுமையில்லை!"

இவ்வாறு 'தேசிய சிறுபான்மை இனங்களும் லெனினும்' என்ற தலைப்பில் கொழும்பு இஸ்லாமிய கலாச்சார மண்டபத்தில் இலங்கை இளஞ் சோனகர் கழகத்தின் சார்பில் உரையாற்றுகையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) தலைவர்களிலொருவரான தோழர் பீட்டர் கெனமன் குறிப்பிட்டார். ஆதாரம்: (டெயிலி மிரர், 24-1-70)

"சிங்கள மொழியை அனைவரும் ஏற்றுக்கொள்வதன் மூலமே தேசிய ஒற்றுமை ஏற்படும். இலங்கையில் உள்ள சிறுபான்மை இனத்தை தடவிக்கொடுத்து மெதுவாக சிங்கள மொழியை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் நிலையை உருவாக்க வேண்டும்."

இவ்வாறு தொடர்ந்து பேசுகையில் தோழர் பீட்டர்

(4ம் பக்கம் பார்க்க)



### வேட்பாளரும் வாக்காளனும்

யாழ்ப்பாணம்,

வேட்பாளர்: அப்பு என்னைத் தெரியவில்லையா? நான் தான் பொன்னம்பலம்:

வாக்காளன்: மலைநாட்டுத் தமிழனைக் காட்டிக் கொடுத்த பொன்னம்பலமா?

## அல்லாவின் பெயரால் வோட்டு வேட்டை!

திருகோணமலை 'மே: 15

திருகோணமலைலிங்கநகர்ப் பகுதியில் வசிக்கும் ஒரு முஸ்லிம் மாதுவும் அவரின் உறவினர்களும் இங்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்பாளராக நிற்கும் ஜமால்தீனுக்கு ஆதரவு தேடும் முகமாக ஒவ்வொரு வீடாகச் சென்று கைச் சின்னத்திற்கு வாக்களிக்கும்படி கேட்கின்றனர்.

இதில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்ருல் இவர்களின் வாக்குக் கேட்கும் விதம் மிகவும் புதுமையாக இருப்பதுதான். தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் மக்களிடம் எதை எதையோ கூறி வாக்குக் கேட்கும் இந்நேரத்தில் இவர்கள் வீடுவீடாகச் சென்று வீட்டுச் சொந்தக்காரரின் நாடியைப் பிடித்து "நீங்கள் கட்டாயம் கைச்சின்னத்திற்கே இம்முறை வாக்களிக்கவேண்டும். நீங்கள் உண்மையாகவே எங்களுக்கு ஆதரவு தருகின்றதாயிருந்தால்

(4-ம் பக்கம் பார்க்க)

### தமிழினத்தின் ஜீவ இயக்கம்

தமிழரசு இயக்கம் ஒரு தணியாத ஜீவ இயக்கம். இன்று குடைபரப்பி நாளை குன்றிமடியும் பலகாளான் இயக்கங்கள் போன்றதல்ல — உடலும் உள்ளமும் இன்றித் தலைமட்டும் கொக்கரித்து திரியும் ஒரு தான்தோன்றி இயக்கமுமல்ல; அடி அடியாய் கொடி கொடியாய் கொள்கைகாக்கும் குன்றங்களான இளந் தலைவர்களையும் செயல் வீரர்களையும் தொண்டர் தளபதிகளையும் உரிய வாரிசுகளாக உற்பத்தி செய்து செழிப்புடன் வளர்ந்து வரும் சிரேட்ட தலைவர்களைக் கொண்ட ஒரு அரசியல் குடும்பம்.

—எஸ். டி. சிவநாயகம்,

(சுதந்திரன் — 8-2-59)

### இராசமாணிக்கத்தின் முயற்சியால்

## 9 இலட்சம் ரூபா செலவில் புளுகுணுவிக்குளம் திருத்தப்படுகிறது

பட்டிருப்பு, மே 12

பட்டிருப்புத் தொகுதியைச்சேர்ந்த மண்முனைப் பகுதியிலுள்ள பெரிய குளமான புளுகுணுவிக்குளம் கடந்த காலத்தில் குறைந்த அளவு தண்ணீர் பிடிக்கக் கூடிய சிறு குளமாகவே இருந்து வந்தது. இதனுல் இப்பகுதியிலுள்ள கமக்காரர்கள்—கூடிய அளவு கமம் செய்யமுடியாது கஷ்டமடைந்தார்கள்.

இவர்களின் கஷ்டங்களை நேரிலே அறிந்துகொண்ட பட்டிருப்பு பிரதிநிதியான திரு. சி. மூ. இராசமாணிக்கம் எடுத்துக்கொண்ட விடாமுயற்சியின் பயனுக இந்தக் குளத்தைப் புதுப்பித்தும் பெருப்பித்தும் புனரமைப்புச் செய்யும் வேலையை மட்டக்களப்பு பகிரங்க வேலை நீர்ப்பாய்ச்சல் பகுதியினர் சென்ற ஆண்டு தொடக்கமாகச் செய்துவருகிருர்கள்.

இதனுல் அம்பிலாந்துறை அரசடித்தீவு - கடுக்காமுனை-கொக்கட்டுச்சோலை-முதலக்குடா-முனைக்காடு-மகிளடித்தீவு-பட்டிப்பளை - படை

(4-ம் பக்கம் பார்க்க)

### வேட்பாளரும் வாக்காளனும்

கைதடி—(சாவகச்சேரி)

வேட்பாளர்: (வயோதிப வேட்பாளரிடம்) அப்பு! பிச்சைச் சம்பளத்துக்கு எழுதுங்கோ. லெக்சன் முடிஞ்சதும் பிச்சைச் சம்பளம் எடுத்துத் தருகிறேன்.

வயோதிப வாக்காளர்: ஓம் தம்பி, நீயே பிச்சைச் சம்பளத்துக்கு எழுதவேண்டி வந்தால்.

## ஊரவன் என்ற கூக்குரலையெழுப்பி தமிழர்களை பிரிக்க முயலுகிறது காங்கிரஸ்!

### வட்டுக்கோட்டை வாக்காளர் குற்றச்சாட்டு!

கொழும்பு, மே 14

கொழும்புவாழ் வட்டுக்கோட்டைத் தேர்தல்தொகுதியைச்சேர்ந்தவர்களின் 'தேர்தல் ஆலோசனைக்கூட்டம் 12-5-70 மாலை 5 மணிக்கு கொள்ளுப்பிட்டி அல்பேட் கவுஸ் காடன் 16ம் எண் இல்லத்தில் திரு. வி. ஈ. அம்பலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய திரு. கா. பஞ்சநாதன் அவர்கள் "முன்பு தமிழரை மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான், மலைநாட்டான் என்று பிரித்த தமிழ்க்காங்கிரஸ், இத்தேர்தலில் காரைதீவான், மூளாயான், வட்டுக்கோட்டையான், சங்கானையான் என்று பிரித்து தமிழ் அரசுக்கட்சியின்-திரு. அமிர்தலிங்கம் அவர்களின் வெற்றியைத் தடுத்துவிடலாமென்று எண்ணுகின்றனர்.

அத்துடன் காடைத்தனத்தாலும் காங்கிரஸ் வெற்றி

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னுர் அரசாங்க அலுவலகங்கள் யூ. என். பியின் தேர்தல் பிரசார களமா?

மன்னுர், மே 14—

மன்னுர் கச்சேரி உள்ளூராட்சி அலுவலகமும் தேர்தல் பிரச்சார இடமாக மாறிவிட்டதா என்று இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

அரசாங்க ஊழியர்கள் தேர்தல்' பிரச்சாரங்களில் ஈடுபடக்கூடாதென்பது அரசாங்கத்தின் கொள்கை ஆனுல் மன்னுர் கச்சேரியில் உள்ள பியோன் ஒருவர் தலைமையில் தேர்தல் பிரச்சாரம் மிக மும்முரமாக நடைபெறுகிறதாம்.

இப்பியூன் அலுவலகவேலையிலும் பின்பும் பிரச்சார வேலையில் ஈடுபட்டுவருகிருர். ஓயாது இவர் அரசியல் பேசுவதால் இங்கு தமது அலுவல்களைப் பார்க்கச் செல்லும் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருப்பதாகவும் பொது மக்கள் குறைப்படுகிருர்கள்.

அடுத்து மன்னுர் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஒருவர் தமது பொறுப்புவாய்ந்த பதவியையும் மறந்து மன்னுர் மாவட்டத்தில் உள்ள கிராமச்சபை அலுவலகங்களுக்கு உத்தியோகபூர்வமான முறையில் செல்வதாகக் கூறிக்கொண்டு போய் கிராமச்சபைத் தலைவர்கள் அங்கத்தவர்கள் ஊழியர்கள் மத்தியில் யு. என். பி. கட்சிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்கிருர் என்று சொல்லப்படுகிறது: இவரு

(4ம் பக்கம் பார்க்க)

## சிவசிதம்பரத்தின் சிங்களப் பேச்சு

(நெடுங்கேணி நிருபர்)

சமீபத்தில் வவுனியாத் தொகுதியில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டமொன்றில் மாஜி எம். பி., தா. சிவசிதம்பரம் சிங்களத்தில் முழக்கமிட்டுப் பேசினுர். இது அவரது அடிமைப் புத்தியை வவுனியாத் தொகுதி மக்களுக்கு மலைமேல் தீபம் போல் எடுத்துக் காட்டுவதாக இருப்பதாக கூறப்படுகிறது.

சிங்கள மக்களை நேசிக்கின்ருர், சிங்களத்திலே பேசுகின்ருர் பெயரை மட்டும் சிவசிதம்பரம் என்று வைத்திருக்கிருரே இது ஏன் என்று இப்பகுதி மக்கள் பேசிக்கொள்ளுகிருர்கள்.

### வேட்பாளரும் வாக்காளனும்

புலோலி—(உடுப்பிட்டி)

வேட்பாளர்: மந்திகை ஆஸ்பத்திரிக்கு பத்து லட்சம் ரூபா அள்ளி வீசியிருக்கிறேன்.

வாக்காளன்: உங்கள் வீட்டுப் பணத்திலா?

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்

# எண்ணம்

## யூ. என். பி. தமிழர்களை பயமுறுத்துகிறதா?

யூ. என். பியும் அதன் ஊது குழல்களான ஏரிக்கரை ஏடுகளும் இப்பொழுது ஒரு புதுவகையான பிரசாரத்தில் தீவிரமாக இறங்கியுள்ளன. சிங்களப் பகுதிகளில்—தென்னிலங்கையில்—வாழும் சிறுபான்மை மக்கள்—குறிப்பாகத் தமிழ் மக்கள் யாரை ஆதரிக்கவேண்டும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது பற்றி போதனை செய்வதற்கு புறப்பட்டிருக்கின்றனர் இவர்கள்.

போதனை செய்கிறார்கள் என்பதைவிட தமிழர்களை பயமுறுத்த ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கூறுவதே சாலப் பொருத்தமாக இருக்கும்.

1956, 1958ம் ஆண்டுகளில் நடைபெற்ற இனக் கலவரங்களின் போது நடந்த நெஞ்சைக் குலுக்கும் பயங்கர சம்பவங்களை—தமிழர்கள் கொடூரமாக குத்திக் கொலை செய்யப்பட்டதை—அனாதைகளாக கப்பலில் ஏற்றப்பட்டதையை எல்லாம் பத்திபத்தியாக எழுதி இவற்றுக்கெல்லாம் காரணம் சுதந்திரக் கட்சி, அரசாங்கமே; அத்தகைய பயங்கரக் கட்சியை தமிழர்கள் ஆதரித்தால் மீண்டும் இனக்கலவரம் ஏற்படும்; ஆகவே யூ. என். பியையே தமிழர்கள் ஆதரிக்க வேண்டும் என்ற பிரசாரத்தில் ஏரிக்கரை ஏடுகள் இறங்கியுள்ளன.

யூ. என். பித் தலைவர்களும் தாம் பேசும் கூட்டங்களில் எல்லாம் 1958ம் ஆண்டில் நடைபெற்றது போன்ற இனக் கலவரம் மீண்டும் ஏற்படும்; கூட்டுக் கட்சி ஆட்சிக்கு வந்தால்—என்ற பிரசாரத்திலீடுபட்டிருக்கின்றனர்.

யூ. என். பியும், ஏரிக்கரை ஏடுகளும் தமிழர்களுக்கு ஆலோசனை கூறுகிறார்கள் என்பதைவிட அவர்களின் தொனியைப் பார்க்கும்போது தமிழர்களை அவர்கள் பயமுறுத்துவது போலவே நமக்குத் தோன்றுகிறது.

யூ. என். பிக்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்; இல்லாவிட்டால், இனக்கலவரம் ஏற்பட்டு தமிழ் மக்கள் கஷ்டப்பட நேரிடும் என்ற பிரசாரத்தில் மறைமுகமாக தொக்கி நிற்கும் உண்மையென்ன?

தென்னிலங்கை வாழ் தமிழர்களே, நீங்கள் யூ. என். பிக்கு வாக்களிக்காவிட்டால், உங்களை 1958-ம் ஆண்டு செய்ததுபோல் அடித்துத் துரத்தி குத்திக் கொலைசெய்து மூட்டை கட்டி வடக்கே அனுப்பி விடுவோம் என்று யூ. என். பி. பயமுறுத்துகிறதா என்றே சந்தேகிக்கப்பட வேண்டியிருக்கிறது.

ஏனெனில் தமிழ் மக்கள் உண்மைகளை இலேசில் மறந்து விடுபவர்களல்லர்.

1956, 1958ம் ஆண்டுகளில் நடைபெற்ற இனக் கலவரங்களுக்கு அப்போதிருந்த சுதந்திரக்கட்சி ஆட்சி எவ்வளவுக்கெவ்வளவு பொறுப்பாளியோ அவ்வளவுக்கவ்வளவு பொறுப்பு யூ. என். பிக்கும் உண்டு.

1956, 1957-ம் ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிராக வார்த்தையால் வர்ணிக்கமுடியாத அளவு வகுப்பு வெறியை கொட்டித் தீர்த்தது யூ. என். பி.

தமிழர்களை வெட்டுங்கள் கொல்லுங்கள் என்று எழுதியது யூ. என். பியின் சியரட்ட பத்திரிகை!

தமிழை வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக்கவும், பிரதேச சபைகள் அமைக்கவும் திரு. பண்டாரநாயகா தமிழரசுத் தந்தையுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட போது அதை எதிர்த்து தீவிர இனவெறிப் பிரசாரம் நடத்தியது யூ. என். பி.

தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படுவதை எதிர்த்து கண்டிக்கு பாதயாத்திரை நடத்தி சிங்கள மக்களிடையே இனவெறியை மூட்டிவிட்டது யூ. என். பி!

பண்டா—செல்வா ஒப்பந்தப்படி நாடு பிளவுபடப் போகிறது என்று துண்டுபட்ட இலங்கைப் படத்தை சந்திதோறும் கட்டி வைத்து சிங்களவர்களிடையே தமிழருக்கெதிரான மிருகத்தனமான உணர்ச்சியை தூண்டி விட்டது யூ. என். பி!

1958ம் ஆண்டு இனக்கலவரத்துக்கு வித்திட்டதவறு யூ. என். பியினுடையது; அக்கலவரத்தை உடனே அடக்கி தமிழர்களைக் காப்பாற்ற முன்வராதது அப்போதிருந்த பண்டாரநாயகா ஆட்சியின் தவறு!

எனவே தமிழர்களைப் பொறுத்தவரை யூ. என். பி. கூட்டுக்கட்சி இரண்டுமே எதிரிகள் தாம் தமிழர்களுக்குாப் தான் உண்மையான நண்பர்கள் என்று இன்று இருாட்சிகளும் வேடம் போடுவதால் தமிழர்கள் ஒருபோதும் ஏமாந்து விடமாட்டார்கள்.

தென்னிலங்கைத் தமிழர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையிட்டு தமிழர்களுக்கு புத்திமதி கூற யூ. என். பிக்கோ, ஏரிக்கரை ஏடுகளுக்கோ கிஞ்சித்தும் உரிமை கிடையாது.

இனக்கலவரங்களைக் காட்டிப் பயமுறுத்தி தமிழர் வாக்குகளை பெறலாம் என்று யூ. என். பி. கருதினால் அது பகல் கனவாகவே முடியும்.

இனக்கலவரத்துக்கு அஞ்சியவர்கள் தமிழர்கள் என்றால் 1958ம் ஆண்டுடன் தமிழினத்தின் உரிமைக்குரல் அடைபட்டிருக்கும். ஆனால் கலவரத்தின் பின்னர் தான் தமிழினத்துக்கு வைராக்கியமும் விடுதலை உணர்ச்சியும் அதிகரித்திருக்கிறது என்பதை கடந்தகால வரலாறு தெளிவாக உணர்த்துகிறது.

தென்னிலங்கைத் தமிழர்கள் யாருக்கு வாக்களிக்கலாம்—வாக்களிக்க வேண்டுமென்பதைக் கூறும் தகுதி தமிழரசுக் கட்சியொன்றுக்கே உண்டு; தந்தை செல்வாவின் நாவிற்கே உண்டு.

ஆகவே தமிழரசுக்கட்சியின் ஆலோசனைப்படி—செல்வாவின் சுட்டுவிரல் காட்டும் பாதையில் தமிழினம் செல்லுமே தவிர யூ. என். பி, அல்லது கூட்டுக் கட்சிகளின் அச்சுறுத்தல்களுக்கு பயந்து ஒருபோதுமே பின்வாங்காது என்று அறுதியிட்டுக் கூறவிரும்புகிறோம்—

# பாலூட்டுவதாக நினைத்து "பொலிடோல்" பருக்க வேண்டாம்

—ஆலாலசுந்தரம்

## ஈழத்துத் தமிழ்மக்கள் பற்றி விவாதிக்க உரிமைபெற்ற ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே

—வழக்கறிஞர் சம்பந்தன்

திருகோணமலை, மே 13

"ஐ. தே. கட்சியினர் இந்நாட்டை அரசோச்சிய காலங்களில் தமிழ் மக்கள் எவ்விதம் கொடுமைப் படுத்தப்பட்டனர் என்பது சரித்திரம் காட்டும் உண்மையாகும், அப்படியாக, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைபறித்தெடுத்து, துரோகமிழைத்த ஆளைக்கட்சியின் பெயரால் உங்களிடம் வாக்குக் கேட்டு வருகின்ற நவரெட்ணராசாவுக்கு நீங்கள் உங்கள் வாக்கை அளிப்பீர்களானால் அது, உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் பாலூட்டுவதாக நினைத்துக் கொண்டு 'பொலிடோல்' பருக்குவதாகவே அமையும். 1963ம் ஆண்டு இடைத் தேர்தலின் போது திருகோணமலைத் தொகுதிக்கு தமிழரசுக்கட்சியின் 'டிக்கட்'டைப் பெற முயற்சித்த அதே நவரெட்ணராசா இன்று ஆளைக்கட்சியின் தயவால் உங்கள் முன் வந்து நிற்கின்றார். அவரை இனிமேலும் அரசியல் அரங்கத்தை எட்டிப்பார்க்காதவாறு செய்ய வேண்டியது திருகோணமலை மக்களாகிய உங்களது பெரும் பொறுப்பாகும். 1963ம் ஆண்டு வரையில் தமிழரசுக் கட்சியின் இலட்சியங்களையும், கோரிக்கைகளையும்சரி என்று ஏற்றுக் கொண்ட நவரெட்ணராசா இன்று ஆளைக்கட்சியின் டிக்கட்டைப் பெற்றுவிட்டதால், அவையெல்லாம் பிழை என்று கூறி தனக்கே வாக்களிக்கும்படி கேட்டுக்கொண்டு திரிந்தால் அவரது அரசியல் பித்தலாட்டம்தான் என்னே!"

இவ்வாறு, திருகோணமலை முதலாம் வட்டாரத் தமிழரசு வாலிப முன்னணியினர் ஒழுங்கு செய்த, பெரியகடை சின்ன முற்றவெளி மைதானத்தில் 8-5-70 அன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தில் திரு. ஆலாலசுந்தரம் உரையாற்றினார். கூட்டத்திற்கு வழக்கறிஞர் திரு. பொ. சீதாராமன் அவர்கள் தலைமை தாங்கினார்.

வெள்ளமாய்த் திரண்டு வந்திருந்த மக்கள் கூட்டத்திற்கிடையே மேலும் பேசுகையில் திரு. ஆலாலசுந்தரம் கூறியதாவது:—

"கட்சியின் கட்டுப் பாட்டை மீறியவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்படுகின்றார்கள். மூதூர் அலி, கல்முனை அகமது, எம். எஸ். காரியப்பர், செனட்டர் மாணிக்கம், மூளை நவரெட்ணம் போன்றவர்கள் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதின் காரணமாக கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்களாவர். மூளை நவரெட்ணம் தமிழினத்தின் விடுதலைக்காக கட்சியோடு சேர்ந்து உழைத்தவர். இதை மறுக்க முடியாது. ஆனால் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதினால் விலக்கப்பட்டார். அதுபோலவே உங்கள் வேட்பாளர் நேமிநாதனோ, இந்த ஆலாலசுந்தரமோ கட்சிக்கு ஒருபொருட்டல்ல. கட்சியின் விதிகளை மீறினால் நானாக இருந்தாலும் சரி, நேமிநாதனாக இருந்தாலும் அவர் விலக்கப்படுவார்.

எனவே நேமிநாதன் மீது தனிப்பட்ட முறையில் குற்றம் கண்டுபிடிப்போர், தமிழரசுக் கட்சிக்காக வாக்களிக்கட்டும். தமிழ்ப்பேசும் மக்களிடையே இன்று தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டு வரும் செல்வாக்கின் காரணமாக பத்தொன்பது தொகுதிகளிலும் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களே தெரிவு செய்யப்படக் கூடிய சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது. ஈழத்தமிழ்ப் பேசும் மக்களின் ஒரேயொரு உரிமைக்குரல் இலங்கைத் தமிழரசுக் கட்சி யென்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

தம்பதெனியாவிலிருந்து எந்தவிதமான சம்பந்தமுமில்லாமல் திருகோணமலைத் தொகுதிக்கு ஆர். ஜி. சேனநாயக்கா தேர்தலுக்காக வந்திருக்கிறார். 'தான் திருகோணமலையில் தேர்தலுக்கு நிற்பது சிங்கள மக்களை ஒன்று படுத்துவதற்காகத்தான்' என்று ஆர். ஜி. யே கூறியிருக்கின்றார். ஆகவே அந்த ஆர். ஜீ. க்கு உள்ள இன உணர்ச்சியும் மான உணர்ச்சியும் தமிழ் மக்களுக்கு இன்னும் ஏற்படவில்லை யென்றால் அதைவிட வெட்கக்கேடு வேறு ஒன்றுமில்லை. எனவே தமிழ் மக்கள் தமது பிளவுகளை மறந்து ஒற்றுமைப்பட்டு ஒரு சிங்களக் கட்சிக்கு இத்திரு விடத்தைப் பறி கொடுக்காது, தமிழரசுக்கட்சியின் கொள்கைகளுக்கு வாக்களிப்பதன் மூலம் நேமிநாதன் அவர்களை அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்ய வேண்டும்."

திரு. நேமிநாதன் அவர்கள் தனது உரையில் கூறியதாவது:- "ஐ தே. கட்சியினர் திருகோணமலை மக்கள் முன் தமது கொள்கைகளை வைத்து வாக்குக்கேட்க முடியவில்லை. தமிழ்ப் பல்கலைக் கழக விடயத்திலும் திருக்கோணேசர் புனிதநகர் பிரச்சினையிலும் திருகோணமலைவாழ் தமிழ்ப் பேசும் மக்களைக் தட்டிக்கழித்து விட்ட ஐ. தே. கட்சியினர் இன்று எவ்விதம் தமது கொளகைகளை முன்வைத்து வாக்குக் கேட்க முடியும்? எனவே அரசாங்க ஊழியர் பலரை கிராமப் புறங்களுக்கு அனுப்பி இல்லாத, பொல்லாத பலபிரச்சாரங்களைச் செய்து வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றனர் ஐ. தே கட்சியினர். ஆனால் அவர்களது இம் முயற்சி தமிழ் இரத்தம் ஓடுகின்ற எந்த ஒரு தமிழ்மகனிடமும் பலிக்காது என்பது உண்மை.

ஆர். ஜி. சேனநாயக்கா துவேஷ வெறியைக் கிளப்பி திருகோணமலையைக் கைப்பற்றி விடலாம் என்று கனவு காண்கிறார். அவரது கனவு பகற்கனவாகவே முடிந்து போவது திண்ணம். இலங்கையில், தன்மானமுள்ள கடைசித் தமிழன் ஒருவன் இருக்கும் வரையில் ஆர். ஜி. நினைப்பதுபோல் தமிழர்களை அடிமை கொள்ளும் எண்ணம் ஒருநாளும் நிறைவேறிவிடப்போவதில்லை என்பதை திருவாளர் ஆர். ஜி. அவர்களுக்கு பகிரங்கமாகக் கூறிக்கொள்கின்றேன். இனிமேல் எந்தக் கட்சிகளுக்குமே திருகோணமலையில் இடமில்லை என்பதனை 'மே' 27நள்ளிரவில் வெளியாகும் தேர்தல் முடிவு காட்டிவிடும்."

நேமிநாதனைத்தொடர்ந்து பேசிய வழக்கறிஞர் இரா. சம்பந்தன் அவர்கள் தனது உரையில் கூறியதாவது;-

'வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுடைய உரிமை பற்றி விவாதிக்கக் கூடிய யோக்கியதை உள்ள ஒரேயொரு கட்சி தமிழரசுக் கட்சியே. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தனது வேட்பாளர்களை பெரும்பான்மையாக நிறுத்தியிருக்கும் ஒரே கட்சியான தமிழரசுக் கட்சியைத் தெரிந்தெடுத்து பாராளுமன்றத்திற்கு அனுப்புவதன் மூலம் தான் தமிழ்ப் பேசும் மக்களுடைய ஒற்றுமையை சிங்களக் கட்சிகளுக்குக் காட்ட முடியும்.

## சிவனேசனே உமக்குச் சித்தம்......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளி செருகப்பட்டது. என்ன உண்மை தானே? இது சுயநலமில்லையா? இந்தச் சுயநலத் தலைவரையா நீங்கள் நம்பி இறங்கியிருக்கிறீர்கள்?

மானிப்பாயில், சண்டிருப்பாயில் முழுக்க முழுக்க எனக்குத் தான் என்கிறீர்கள். மானிப்பாயில் படிப்பித்தாலும், சண்டிருப்பாயில் பிறந்ததாலும் இப்படி மார்தட்டுகின்றீர்களே! இதோ ஒரு சின்னக் கேள்வி. சுயேட்சை அபேட்சகராகத் தேர்தலில் நிற்கும் விநோதன் சண்டிருப்பாய் வாசியல்லவா? அதுவும் அவர் தங்கள் சொந்தக் காரனுமல்லவா? அப்படி யானால் சண்டிருப்பாய் எப்படி உங்களுக்கு 'சொலிற்' கொஞ்சம் சொல்லுங்கள்?

மானிப்பாய் சொலிற்று? நல்லது. முதலியார் சுயேச்சை அபேட்சகர் மானிப்பாய் பட்டின சபை அங்கத்தவர்—கட்டுடை வாசிக்கு கொஞ்சமாயினும் இங்கு செல்வாக்குண்டல்லவா? அப்படியானால் எங்கே உங்கள் 'சொலிற்'?

ஏழாலை கி. சூ தலைவர் சிவகுரு 7000ம் வாக்குகள் சிவனேசனுக்கு "சொலிற்" என்றார். நவாலிக் கூட்டத்தில் அப்படியானால் சிவகுரு போட்டியிட்டிருக்கலாமே? சிவகுருவின் கட்டளைப்படி ஏழாலை மக்கள் வாக்களிக்க அவர்கள் என்ன ஏமாளிகளா? இளிச்ச வாயர்களா? வாக்குச் சீட்டில் புள்ளடியிடுவது சிவகுருவா, மக்களா? இந்த அவிட்டாப் பேச்சு அவுட்டாக இன்னும் சொற்ப நாட்களே. பொறுத்திருந்து பாருங்கள். குட்டு வெளிப்படும்.

தமிழரசுக் கட்சியின் வெற்றி உடுவிலில் நிச்சயம் என்பதை மே 28 அதிகாலைக்கிடையில் தெரிந்து விடுவீர்கள். எனவே புருனை புறப்பட குடும்ப சகிதம் பாஸ்போட்டை றெடியாக வைத்திருங்கள்.

தங்கள் கட்சி சரக்கு மட்டம். இங்கு செல்லாது; கடையைக் கட்டுங்கள்;

முன்னொரு தடவை எனது நண்பரொருவர் தங்களைப் பற்றி எழுதிய கட்டுரைக்காக சில ஏவல் பேய்கள் அவரை எச்சரித்ததையும் நானறிவேன். என்றாலும் இதை எழுதினேன். ஏன் தெரியுமா? என்னை அவர்கள் நிச்சயம் சந்திக்க முடியாது. சந்திரமண்டலம் அல்லது ஹூஸ்டன் தான் வர வேண்டும்.

தமிழரசுப்படை வீரர் வரிசை (5)

## உடுவில் வீரர் தருமலிங்கம்



தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தமிழினத்துக்காக உழைத்து வரும் கடமை வீரர்தான் திரு: வி. தர்மலிங்கம் அவர்கள்;

இவரது தமிழார்வமும், நாட்டுப் பற்றும், முற்போக்குக்கொள்கைகளும் இளமையிலேயே மிளிரத் தொடங்கியது. கொழும்பு சட்டக் கல்லூரியில் பயின்றபோது ஒரு தமிழ் மாணவ மன்றம் அமைக்க அயராது பாடுபட்டார்; தமிழர் சமுதாயத்தின் எதிர்காலம் பற்றிய நல்லெண்ணங்களாலேயே இவர் இன்று தமிழரசுக் கட்சியின் ஆற்றல் மிக்க ஒரு இளம் தலைவராகமாறி உடுவிலைத் தமிழரசின் கோட்டையாகவும் ஆக்கிவைத்திருக்க முடிகிறது.

உடுவில் கிராமச் சங்கத்தலைமைப் பதவியை எட்டு ஆண்டுகள் அலங்கரித்து பற்பல பணிகளைப் புரிந்துள்ளார். கடந்த பாராளுமன்றத்தில் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் தமிழரசின் பிரதம கொறடாவாக வீற்றிருந்து பாராளுமன்ற விவாதங்களிலெல்லாம் பெருமளவில் கலந்து தமது தொகுதியின் மறுமலர்ச்சிக்காக வாதாடியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் அறப்போராட்டங்களெல்லம்திரு. தருமலிங்கம் இல்லாமல் நடந்ததே இல்லை. 1958ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின் பின் கொழும்பிலும், இதர தென்—மத்திய மாகாணங்களிலும் தமிழ் மக்கள் பல கொடுமைகளை அனுபவித்த போதும், பலர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தபோதும் திரு.வி.தருமலிங்கம்பணத்தைப் பணம் என்று பாராமல் நிவாரணமளித்தும் உடலை வருத்திப் பாடுபட்டும் உழைத்தவராவார்.

இவரை எல்லாருமே எங்கள் தருமர் எனபுகழ்வார்கள். தமிழரசுக்கு எதிரானவர்கள் கூட திரு. தருமலிங்கத்தை பொன்னான மனிதர்—பெருந்தன்மை மிக்கவர் பாரபட்சம் பாராதவர், எல்லோரையும் ஒன்றாக கருதுபவர் என்று கூறுகின்றார்கள். அதனால் தான் இவர் சோவியத்—இலங்கை நட்புறவுச் சங்கம் போன்ற பிரபல சங்கங்களிலெல்லாம் தலைவர் பகுதியை அலங்கரிக்கின்றார்.

இவரை இளைஞர்கள் போற்றிப் புகழ்வதோடு இவரின் கொள்கைகளை

(4-ம் பக்கம் பார்க்க)

# சிவனேசனே உமக்குச் சித்தம் கலங்கி விட்டதா?

## சமஷ்டி தமிழ்நாடு இப்பொழுது ஒற்றையாட்சி.... இனி என்ன?

சண்டிருப்பாய் வாசியும், புருனையை உத்தியோக உறைவிடமாகக் கொண்டவரும், தேர்தலுக்காக மானிப்பாயில் வசிப்பவருமாகிய திருவாளர் சிவநேசனுக்கு அப்பலோ எழுதும் பகிரங்கக் கடிதம்:— அரைகுறைகள் மத்தியில், படித்துப் பட்டம் பெற்று, பெற்ற நாட்டை விட்டு வேற்று நாடு சென்று தானுண்டு தன் குடும்பமுண்டு என்று வாழ்ந்து வந்திருக்கும் திருவாளர் சிவநேசன் அவர்களே!

சண்டிருப்பாய் பொது மேடையில் கட்டுப்பாட்டை மீறித் தங்கள் வயிற்றெரிச்சலை வாந்தி எடுத்து வாக்காளப் பெருமக்களிடம் வாங்கிக் கட்டிய வண்டவாளத்தை இங்கு எழுதவில்லை. உங்கள் பண்பற்ற நடத்தையை நாடே பேசிக்கொண்டிருக்கிறது. அதில் தான் ஏன் தலையைப்போட்டு உடைக்கவேண்டும்.

ஒருவன் பணக்காரனாவதும், சொத்துக்கள் சேர்வதும், எம். பி. யாகவருவதும் அவனவன் பிராரத்துவம் கச்சி ஏகம்பனே. இந்துப் பல்கலைக்கழகம் கேட்ட தாங்கள் இந்த இந்து தர்மசாத்திர உண்மைகளை மறந்ததேனோ?

தங்கள் முன்னாள் பெருமையும், இன்னாள் பட்டமும் பதவி வேட்கையும் பற்றி என் சிற்றறிவுக் கெட்டியவாறு சில கேள்விகள் கேட்கிறேன்; தயவுசெய்து பதில் அளிப்பீர்களாக!

தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் தெரிவுக்குழு தீர்மானிக்க முன் தாங்கள், தங்கள் படத்தையும் விளம்பர நோட்டீசையும் அடித்து வீதிதோறும் பவனிவர விட்டீர்களா இல்லையா?

இதுபற்றி சில காங்கிரஸ் ஆதரவாளர்கள் தங்களைக் கேட்டபோது அது பொன்னம்பலம் சொன்னார் நான் செய்கிறேன் என்று பதிலளித்தீர்களா இல்லையா?

அப்படியானால் அபேட்சகர் தேர்வுக்குழு வென்று சொன்னதெல்லாம் வெறும் கண்துடைப்பா? இதிலிருந்து தமிழ் காங்கிரஸ் என்றால் பொன்னம்பலம், பொன்னம்பலமென்றால் தமிழ் காங்கிரஸ் என்று தமிழரசுக்கட்சி சொல்வது நூற்றுக்கு நூறு உண்மையல்லவா?

உங்கள் தற்பெருமையைக் கண்டும் கொஞ்சச் சுருட்டுத் தொழிலாளர் ஆதரவு கொடுத்தால் எலக்ஷன் வெல்லலாமோ என்று கமிட்டியில் கேட்டதையும் கேட்டபின்னல்லவா சின்னத்துரை பொன்னம்பலம் முதலியார் கட்சிக்கு முழுக்குப் போட்டு, சுயேட்சையாக அபேட்சையைத் தாக்கல் செய்துள்ளார்?

எலெக்ஷன் கூட்டங்களிலும், அன்று பொதுமேடையிலும் தமிழரசுக் கட்சிக் கொள்கை கூடவே கூடாது என்றும் ஒற்றையாட்சிதான் விமோசனம் அளிக்குமென்றும் விளாசிவரும் சிவனேசன் அவர்களே!

தாங்கள் யார்? தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆரம்ப 'பவுண்ட்' மெம்பரா? கட்சிக்காக உழைத்து உழைத்து அலுத்தவரா? தமிழரசுக்கட்சியின் ஆரம்ப அங்கத்தவனல்லவா தாங்கள்? என்ன் இல்லையா?

1960ம் ஆண்டுத் தேர்தலில் சுயேட்சையாக உடுவில் தொகுதியில் போட்டியிட்டபோது என்ன சொன்னீர்கள்? ஞாபகம் இருக்கின்றதா? "தந்தை செல்வா நல்லவர், வல்லவர், அவர் சமஷ்டி ஆட்சிதான் நாட்டுக்கு நல்லது. நான் சமஷ்டி ஆட்சிக்காகத்தான் போட்டியிடுகிறேன். இதோ செல்வா தனது கைப்பட எழுதிய கடிதங்கள் எனக்கு" என செல்வா புகழ் பாடியும், சமஷ்டிக்காகவும் தாங்கள் போட்டியிடவில்லையா?

இப்படி நான் எங்கே சொன்னேன் என்று எண்ணுகிறீர்கள். 1960 ம் ஆண்டு தாங்கள் சண்டிலிப்பாய் விளையாட்டு மைதானத்தில் இரவு 12 மணி தொடக்கம் 1 மணிவரை முழக்க மிட்டதை எண்ணிப்பாருங்கள். உங்கள் பேச்சையும் செல்வாவின் கடிதங்களை நீங்கள் படித்து உங்கள் ஆதரவுக்கு வக்காலத்து வாங்கியதையும் தான் கண்விழித்து கட்டுடையில் படுந்திருந்தபடி கேட்டது இன்றும் பசுமையாக இருக்கின்றது.

பொதுமேடைக் கூட்டத்தில் 'இந்நாட்டில் சமஷ்டி ஆட்சி முறை பொருந்தாது. ஒற்றை ஆட்சி அமைப்பில் தான் சுபீட்சம்உண்டு என்று அடித்து முழக்கினீர்கள்.

இந்த ஒற்றை ஆட்சிச் சித்தாந்தம் எப்போ உதயமானதோ?

நீங்களும் சரி உங்கள் தலைவர் பொன்னம்பலமும் சரி சமஷ்டி ஆட்சியை விரும்பியிருந்தீர்கள் என்பதை மறுக்க முடியுமா?

திரு. பொன்னம்பலம் இதனை செல்வா சொன்னதால் எதிர்க்கிறார்; நீங்களோ தமிழரசு வேட்பாளராக நிற்க அனுமதிக்காததால் எதிர்க்கிறீர்கள்! உண்மையா? இல்லையா?

'தமிழரசு என்ற போரில் பெயரை நீக்கி விடுங்கள்' என்று கேட்டீர்கள் அன்றைய பொது மேடையில். தமிழரசுக் கட்சியில் இருந்த போது இந்த எண்ணம் ஏற்படாததேனோ? தங்கள் அபேட்சை மனு நிராகரிக்கப்பட்ட பின் தான் இந்த எண்ணம் மலர்ந்ததா? இருக்குமட்டும் தமிழரசில் இருந்துவிட்டு கட்சி நிராகரித்த பின் தான் இந்த ஞானோதயம் உதயமானதா? தங்கள் அவுட்டரப் பேச்சு மக்களுக்கு டவுட்டாச்சு. தங்களிடம் சரக்கு மட்டம்; கடையைக் கட்டுங்கள் என்று மக்கள் கேட்பது காதுகளுக்கு எட்டவில்லையா?

1947 மார்கழி 17ந் திகதிய "Colombo City News" என்ற வாரம் இருமுறை இதழில் உங்கள் தலைவர் சொன்ன செய்தி ஒன்று வெளிவந்ததைத் தாங்கள் படித்துப் பார்த்ததுண்டா! உங்களுக்கு அதற்கெங்கே நேரம் ஏற்படப் போகின்றது. இதோ அந்தச் செய்தி.

"—Tamil leaders prepare for partition. Co-operation with the Sinhalese in a Federal Constitution is the irrevocable Tamil goal declares Mr. Ponnampalam."

பொது மேடையில் இடையிடையே இங்கிலீஷ் பேசி—இங்கிலீசில் தான் பேசுவேன் என்பதை மக்களுக்குக் காட்ட நடித்தீர்கள். என்றாலும் நான் இதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் தருகிறேன்:

"தமிழ்த் தலைவர்கள் பிரிவினைக்குத் தயாராகின்றார்கள். ஒரு சமஷ்டி அரசியலமைப்பின்கீழ் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வது தான் தமிழ் மக்களின் தவிர்க்கமுடியாத இலட்சியமாகும் என்கிறார் பொன்னம்பலம்."

நீங்கள் இருவரும் முதன் முதல் கேட்டதை 'கோட்டை' விட்டு விட்டு எங்கே போகிறீர்கள்? கொஞ்சம் நில்லுங்கள். யாரை ஏமாற்ற இந்த வெளி வேஷம்? மக்கள் என்ன மண்டுகங்களா? அரசியல் தெரியாதவர்களா?

இதுமாத்திரமா இதோ இன்னும் ஒரு சாம்பிள்.

நீங்கள் முதன் முதல் போட்டியிட்டபின் ஈழத்தமிழர் முன்னணி என்று ஒரு முன்னணியை திரு. ஸி. சுந்தரலிங்கம் அமைத்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதல்லவா? இதன் இலட்சியம் தனித் தமிழ்நாடு அமைப்பதல்லவா? இவ் அமைப்புக் கூட்டத்தில்கலந்து 'பெற்றால் தமிழ்நாடு இன்றேல் பிணமுரசு' என்று பேசவில்லையா? மறந்திருக்கமாட்டீர்கள் என்றே நம்புகிறேன்;

முதலில் சமஷ்டி, பின்னர் தனித் தமிழ்நாடு இன்றோ ஒற்றையாட்சி நாளை என்னவோ?

"காலஞ்சென்ற டி. எஸ். மந்திரிசபையில் தனக்கொரு மந்திரிப்பதவி கிடைக்கவில்லையே என்ற ஆத்திரத்தில், குரோத உணர்வால் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சமஷ்டிக்கட்சியை ஆரம்பித்தார்," என்றதொரு மாபெரும் மடைத்தனமான உண்மையைக் கண்டுபிடித்தீர்கள்; ஐயோ பாவம்! மலையைக்கொல்லி எலியை அதுவும் சுண்டெலியைப் பிடித்தீர்கள். அந்தச் சுண்டெலியும் செத்த சுண்டெலி. ஏன் என்று நினைக்கிறீர்கள்? இதே கட்சியில் ஆரம்ப அங்கத்தவராயிருந்தவராயிற்றே தாங்கள். இந்த உண்மை அன்று புலப்படவில்லையா? அப்படியானால் எதற்காகசமஷ்டிக் கட்சியில் இருந்தீர்கள்.

கட்சியில் இல்லாதவன் சொன்னால் பறவாயில்லை. கட்சியில் இருந்து எனது இலட்சியமே சமஷ்டிதான் என்று தம்பட்ட மடித்தீர்களா இல்லையா? பின் இன்று எதற்காக இந்த வேடம். மக்கள் உங்கள் தகடு தத்தங்களை மறந்து விட்டார்கள் என்று மாயமாலம் கொட்டுகிறீர்களா? அன்று மதுபோதையில் ஒட்டிக்கொண்டிருந்தீர்களா? அல்லது மனோநிலை சரியில்லாதவராகி இருந்தீர்களா? நேரத்திற்கு நேரம் வெவ்வேறு வேஷம் போடும் உங்கள் தரவழியளுக்கு அங்கொடைப் பக்கத்திலும் போக இடம் கிடைக்கமாட்டாதல்லவா?

"யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் வேண்டுமா? தமிழ் காங்கிரசிற்கு வோட்டுப் போடுங்கள்" என்கிறீர்கள். என்ன குறுகிய குதர்க்க வாதம் இது: படித்தவரென்றும், பட்டம் பல பெற்றவரென்றும் பறைசாற்றும் தாங்கள் இப்படிப் பேசியது ஆச்சரியத்தைத் தான் தருகின்றது:

ஐ சே! சிவனேசன் உங்கள் தலைவரின் இந்துப் பல்கலைக் கழகம் எங்கே போய்விட்டது? இராமனாதன் துரையின் சமாதியுடன் சங்கமமாகி விட்டதா?

தேர்தலுக்காக நல்லூரென்றும், கோப்பாய் என்றும், பருத்தித்துறை என்றும் ஆலாய்ப் பறந்து அங்கெல்லாம் முடியாமையால் திரும்பவும் போன மச்சான் திரும்பி வந்திருக்கிறார் பூமணத்தோடே. பழைய படிவேதாளம் முருக்க மரத்தில் ஏறிவிட்ட பின்னர் தான் தமிழ் பல்கலைக் கழகம் பல்லவி ஒரு கட்டைச் சுதியில் பாடப்படுகின்றது. வேறு தொகுதியில் பொன்னம்பலம்போட்டியிட்டால் இந்துப் பல்கலைக் கழகம் நிச்சயம் புத்துயிர் பெற்றிருக்கும். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவ மக்களின் வாக்குகள் கிடைக்காதென்பதினாலே யல்லவா இந்துப் பல்கலைக் கழகக்கோரிக்கைக்குக்

(2-ம் பக்கம் பார்க்க)

## 'இலங்கைத் தமிழ் பெருமக்களின் மதிப்பு மிகு தலைவர் செல்வநாயகம்'

### மூதறிஞர் இராஜாஜி வாழ்த்துகிறார்!

"1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ந் தேதி ஆங்கிலேயரின் ஆட்சி மறைந்து இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால், நாட்டுக்கு கிடைத்த சுதந்திரம் நாட்டு மக்கள் எல்லோருக்கும் கிடைக்விலலை. அதற்குப் பதிலாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அதைத் தங்களுக்கு ஏகபோகமாய் அபகரித்துக் கொண்டார்கள். இலங்கைத் தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டனர்; அன்னிய ஆங்கிலேய ஆட்சியிலும் தமிழ் இனத்தவர்கள் அடிமைகளாய் இருந்தார்கள் என்பது உண்மையே! ஆனால் அந்த ஆட்சியில் தமிழினத்தை அழிக்கும் முயற்சிகள் நடைபெறவில்லை. சிங்கள மக்களின் ஆட்சியில் தமிழ் மக்களுக்கு பயங்கரமான ஆபத்து ஏற்பட்டிருக்கிறது" என்று கூறுகிறார் திரு. செல்வநாயகம்.

"திரு. செல்வநாயகம். இலங்கை வாழ் 25 இலட்சம் தமிழ்ப் பேசும் பெருங் குடிமக்களின் மதிப்புக்கும், மரியாதைக்கும் பாத்திரமான தலைவர். ஒரு மாபெரும் சமூகத்தின் உரிமைக்காகப் போராடிவரும் அத்தலைவரின் "அமைதியான அகிம்சைப் போராட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழர்கள் நிச்சயம் வெற்றியடைவார்கள்."

—இராஜாஜி.

—கல்கியில் எழுதியவை (5-6-60)

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

# செல்வாவிடம் டட்லி மண்டியிட்ட வரலாறு!

## சுவையாகக் கூறுகிறார் அமிர்தலிங்கம்

(மட்டுநகர் நிருபர்)

தேர்தல் முடிந்ததும் 1965 மார்ச் 24-ந் திகதி எங்கள் தலைவர் திரு. எஸ்.ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கியவுடன், திரு. டட்லி சேனநாயக்கா



ஒருபுறமும், டாக்டர் என். எம். பெரேரா, திரு. ரி. பி. இலங்கரத்தின ஆகியோர் இன்னொரு புறமுமாக நின்று மாலைகள் சூட்டி வரவேற்றார்கள்.

இவ்வாறு திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் மட்டக்களப்பு, பாட்டாளி புரத்தில் ஒரு கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

'தமிழரசுக் கட்சியின் தலைவருடன் கலந்துரையாடுவதற்காக டாக்டர் என். எம். பெரேரா, திரு. ரி. பி. இலங்கரத்தின ஆகியோர் திரு. திருச்செல்வம் அவர்களின் வீட்டில் காத்திருந்தார்கள்.

அதே நேரத்தில் திரு. டட்லி சேனநாயக்கா, திரு. ஜே. ஆர். ஜயவர்தன ஆகியோர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் அவர்களின் வீட்டில் காத்திருந்தார்கள்.

ஆனால் திரு. சேனநாயக்கா முதலில் தந்தை செல்வாவைச் சந்தித்துப் பேசியதன் பேரில் ஒரு சுமுகமான முடிவுக்கு வந்தனர்; அதன்படி தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு உடன்படிக்கைக் கடிதத்தை இரவு பகல் ஒரு மணியளவில் பெற்றுக் கொண்ட அவர் தேசாதிபதியை இராணி மாளிகையில் சந்தித்து யூ. என். பி. அரசாங்கத்தை அமைக்கலாம் என்றறிவித்தார்.

அந்தக் கடிதத்தை நாங்கள் கொடுக்காதிருந்தால் டட்லி சேனநாயக்காவினால் தேசிய அரசாங்கத்தை அமைத்திருக்க முடியாது.

ஆனால் இவ்வாறு அரசாங்கத்தை அமைத்த டட்லி தான் கிழக்குமாகாணப் பட்டிருப்பில் தமிழரசு எல்லாத் தொகுதிகளிலும் வென்றாலும் ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியுமா என்ற ஒரு அபத்தமான கேள்வியைக் கேட்டிருக்கின்றார். எது எப்படியானாலும் இந்தத் தேர்தலின் பின் யூ. என். பியாயிருந்தாலும், ஐக்கிய முன்னணியாயிருந்தாலும் தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்பின்றி ஒரு அரசாங்கத்தை அமைக்கவே முடியாது.

திரு. செ. இராசதுரை பேசும்போது குறிப்பிட்டதாவது:—

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை தமிழரசு ஆதரித்ததனால் மலைநாட்டினர்க்குத் துரோகம் செய்ததாகக் கூறுவது விண்புரளியாகும்.

அந்த ஒப்பந்தம் மலைநாட்டவர்க்கு அனுகூலமானது. அதனால் ஏராளமானோர்க்கு இலங்கையின் அரசியல் உரிமைகள் வழங்கப்படும் என்பதனலேயே தமிழரசு ஆதரித்தது.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை நாங்கள் மட்டுமல்ல தொழிலாளர்களின் செனட்டர் தொண்டமான், ஏ. அசீஸ் போன்ற மலையகத் தொழிலாளர் தலைவர்களே ஆதரித்தார்கள். சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் மலையகத்தினருக்குத் துரோகமிழைப்பதாயிருந்தால் இவர்களே அதை ஆதரித்திருப்பார்களா?

இவ்வாறு செ. இராசதுரை கேட்டார்:

# 'தமிழர் சிங்களவராக மாறத்தான் வேண்டும்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கெனமன் கூறியிருக்கிறார்; இதுபற்றி தமிழ் மக்கள் பின்வரும் கேள்விக்கணைகளை தொடுக்கிறார்கள்.

''காங்கேசன்துறை கம்யூனிசத்தின் காவலரான வி. பொன்னம்பலம் அவர்களே! எதற்காக நீங்கள் இம்முறை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிடுகிறீர்கள் என்பதை எங்களுக்கு நீங்கள் கூறுவீர்களா?

தோழர் பீட்டர் கெனமனோடு சேர்ந்து ஈழத் தமிழ் பேசும் மக்களின் தோள்களை மெதுவாகத் தடவிக் கொடுத்து அவர்களை யெல்லாம் சிங்களவராக மாற்றத் தான் போகிறீர்களா?

இணைப்புமொழி என்ற போர்வையில் சிங்களத்தை தமிழ்பேசும் குழந்தைகளின் தொண்டைக்குள் திணித்து தமிழ்பேசும் மக்களை படிப்படியாக சிங்களவராக மாற்றுவதுதான் உங்கள் தோழர் பீட்டர் கெனமனின்—உங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின்—அந்தரங்கத் திட்டம். இத்திட்டத்திற்கு நீங்களும் உடந்தைதானே. இல்லாவிடில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எப்படிப் போட்டியிடுகிறீர்கள்?

தமிழினம் தனது தாய் மொழியாம் தமிழ் மொழியை உயிரைவிட மேலாக கருதும் இனம்-மொழிக்காக தமிழர்கள் செய்துவரும் தியாகங்கள் உமக்கு தெரியாதா? தமிழ்நாட்டில் தமிழ் காக்க சிறையில் உயிர்விட்டார்களே தாலமுத்து நடராசன்-தமக்குத்தாமே தீக்குளித்து செத்தார்களே சின்னச்சாமி போன்ற திருவிடத்து வீரர்கள்—அதுபோன்ற சம்பவங்கள் ஈழத்திலும் நடைபெறவேண்டுமென்றுஆசைப் படுகிறீர்களா? இதை மட்டுமல்ல, இதைவிடவும் பல பயங்கரமான தியாகங்களைச் செய்து உங்களிடமிருந்து தமிழைக் காக்க தமிழினம் தயாராக இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

காங்கேசன்துறையில் தமிழினத்தின் விடுதலைச் சின்னமாக - தமிழினத்தின் தனித்துவத்தை காக்க இறுதி வரை போரிடுவேன் என்ற உறுதியுடன் தியாகத்தின் திருவுருவும்- ஈழத்தமிழினம் 30 இலட்சம் பேரும் ஒருருவாகக்காட்சிதரும் தந்தை செல்வா போட்டியிடுகிறார்; அவருடன், தமிழினத்தை சிங்களமயமாக்கவேண்டும்; சிங்களத்தைதமிழர் தொண்டைக்குள் திணித்தே தீர வேண்டும் என்ற நோக்கத்தைக்கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நீர் போட்டியிடுகிறீர். நீர் தரும் துளி விஷத்தை பருக—முழக் கயிற்றை முத்தமிட, அடிமைத்தனத்தை அரவணைக்க, தன்மானம் மிகுந்த காங்கேசன்துறை வாக்காளர்கள் ஏமாளிகளல்லர், தந்தையின் வெற்றிக்கு பலம் சேர்த்து தமிழினத்தின் விடுதலைப் போருக்கு வேகம் சேர்ப்பார்கள் அவர்கள். இது நிச்சயத்திலும்நிச்சயம்.

'வி. பொ. அவர்களே, உமக்கு தன்மானமிருந்தால், நீரும் ஒரு தமிழனுனல் உடனே பீட்டர் கெனமனின் தோசை வடைக் கட்சியை விட்டு வெளியேறும். இதுவே தமிழ்மக்களின் கோரிக்கை.

## அல்லாவின் பெய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லாவின் பெயரால் கட்டாயம் சத்தியம் செய்து தர வேண்டும்' என்று அவர்களைக் கேட்டு, வீட்டுக்காரர்களைத் தர்ம சங்கடமான நிலைக்கு உள்ளாக்குகின்றார்கள்.

ஆனாலும் தமிழுணர்வு நிரம்பிய லிங்கநகர் மக்கள் இவர்கள் முகத்திற்கு நேரே தமது வாக்கு திரு. நேமிநாதன் அவர்களுக்கே என்று கூறியுள்ளார்கள். மேற்படி வாக்கு வேட்டை யாடுபவர்கள் லிங்கநகர் பெண்களிடம், ''இரண்டு கொத்து அரிசி வேண்டுமா? இல்லை கதிரை துடைக்கின்ற எம். பி. வேண்டுமா?'' என்று கேட்டார்களாம்; ஆனாலும் இவர்களின் கேள்விகளுக்குச் சரியான பதிலடி கொடுத்து லிங்கநகர்ப் பெண்கள் திருப்பி அனுப்பிவைத்துள்ளார்கள்.

பட்டொளி வீசிப் பறக்கும் மூவர்ணக் கொடிகளை லிங்கநகரின் ஒவ்வொரு வீட்டின் படலையிலும் கண்டவுடன் பேயைக்கண்ட பூசாரி போல் புசுக்கென்று திரும்பி விட்டது இந்தக்கூட்டம். இவர்களின் சத்திய வாக்கு வேட்டை, புஸ்ஸென்றுசீறிய புஸ்வாணமாக ஆகிவிட்டது.

## ஊரவன் என்ற கூக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற முயல்கிறது. ஒன்றை ஞாபகமூட்டுகின்றேன், கடந்த தேர்தலில் காரை நகரில் நடைபெற கூட்டத்தை நோக்கி ஒரு கல் எறியப் பட்டது. அந்தக் கல்லை எடுத்துக்கொண்டு தமிழரசுத் தந்தை கூறினர். ''காடையர் எறிந்த ஒரு கல் எமக்கு ஆயிரம் வாக்குகளைக் கொண்டுவரும். இப்படிப் பத்துக்கல் எறிந்தார்களானல் பத்தாயிரம் வாக்குகளைக்கொண்டுவரும் என்று. அவ்வாறே பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளால் கடந்த தேர்தலில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் வெற்றி பெற்றார், காங்கிரஸ் காடையர்களுக்கு இதனை நினைவூட்டுகின்றேன்' என்றார்.

திரு. சத்தியவான் பேசுகையில் தமிழரசுக்கோட்டைகளிலொன்று வட்டுக்கோட்டை. தமிழுக்கு உயிர் கொடுப்பவர்கள் வட்டுக்கோட்டை மக்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் வெற்றியை தனிப்பட்ட ஜே பிக்களால் தடுத்துவிட முடியாது'' என்றார்.

திரு. சம்பந்தமூர்த்தி, புங்கையூர் க. திருவிளங்கம் ஆகியவர்களும கூட்டத்தில் பேசினர்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை ஆதரித்துப் பிரசாரம் புரிவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆய்வு செய்து 'எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வது' என்று தீர்மானிக்கப்பட்டது.

## மன்னார் அரசாங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைய முழு உத்தியோகமும் பிரச்சார வேலையாகவே இருக்கிறதாம்.

அரசாங்க ஊழியர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்யக்கூடாதென்பது அரசாங்கத்தின் கொள்கை. ஆனால் மன்னார் மாவட்டத்தில் மட்டும் மேற்காட்டிய இருவருக்கும் அரசியல் உரிமை வழங்கப்பட்டுவிட்டதா? எனப் பொதுமக்கள் கேட்குமளவிற்கு யு. என். பி; தேர்தல் பிரச்சாரம் நடைபெறுகிறது.

இதுபற்றித் தேர்தல் கமிஷனருக்கும் அரசாங்க அதிபருக்கும் முறையீடு செய்யும் பொருட்டு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## 9 இலட்சம் ரூபா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாண்டவெளி-பண்டாரியாவெளி ஆகிய கிராமங்களில் வாழும் சுமார் 10,000 மேற்பட்ட கமக்காரர்கள் இலாபமடைவதுடன் சுமார் 10,000 ஏக்கர் வயல் இருபோகச்செய்கைக்கு வாய்ப்பு நல்குகிறது.

இந்தச் செயல் மண்முனை மக்களுக்கோர் வரப் பிரசாதமாகும்.

தும்பங்கேணியில் திறக்கப்பட்டுள்ள வைக்கோல் கொள்வனவு நிலையம் பலருக்கு வேலைவாய்ப்பை அளிப்பதுடன்-படுவாங்கரை மக்களுக்கோர் பொருளாதார வளத்தையும் நல்கியுள்ளது. இத்தனையும் திரு. இராசமாணிக்கத்தின் சாதனை. இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் மண்முனை மக்களின் பொருளாதாரத்தில் ஓர் புரட்சிகரமான மாற்றத்திற்கு வழிகாட்டும் என மக்கள் கூறிக்கொள்ளுகிறார்கள்.

## வேட்பாளரும் வாக்காளனும்

வீமன்காமம்—(காங்கேசன்துறை)

கம்யூனிச வேட்பாளர்: இம்முறை கூட்டணிக் கட்சிதான் அரசாங்கம் அமைக்கும். எனக்கு மந்திரிப் பதவி கிடைக்கும். தம்பி உனக்கு நல்ல ஒரு தொழில் எடுத்துத் தாறன்.

வாக்காள இளைஞன்: மசால வடை நல்லெண்ணை விற்கிற தொழில் எடுத்துத் தர முடியுமோ?

## உடுவில் வீரர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்ககள். திரு. வி. த. வைப்போன்ற தீவிர முற்போக்காளரைக் காண்பது அரிது. இவர் தீவிர சோஷலிசவாதி, தீண்டாமையின் வைரி. அதனலேயே இவர் தமது நண்பர்களிடமும், அரசியல் பேசுவோரிடமும் சோவியத் நாட்டின் சமஷ்டி பற்றி அருமையாக விளக்க வல்லவராகிறார். திரு. தர்மலிங்கம் பல வெளிநாடுகளையும் பார்த்த அனுவபசாலி. நமது ஈழத்திரு நாடும் வெளிநாடுகளைப் போலப் பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமெனக் கனவு காண்பதோடு அதற்காக அயராது உழைப்பவருமாவார்.

இந்தச் சேவை இனியும் தொடர்ந்து உடுவில் தொகுதி மக்களுக்குக் கிடைக்கவேண்டுமானல் திரு. தர்மலிங்கமே இம்முறையும் வெற்றிபெற வேண்டும்.

## ஜீ. ஜீ. இம்முறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜீ: ஜீக்கு கிடைத்தது * 14324

ஜீ. ஜீக்கு எதிரானவை 28224

1952—மொத்த வாக்குகள் 29489

ஜீ: ஜீக்கு கிடைத்தது * 12726

ஜீ. ஜீக்கு எதிரானவை 16763

1956—மொத்த வாக்குகள் 34803

ஜீ. ஜீக்கு கிடைத்தது * 8914

ஜீ: ஜீக்கு எதிரானவை 25889

1960—மார்ச்!
மொத்த வாக்குகள் 24299

ஜீ. ஜீக்கு கிடைத்தது * 5312

ஜீ. ஜீக்கு எதிரானது 18987

1960—ஜூலை
மொத்த வாக்குகள் 24299

ஜீ. ஜீக்கு கிடைத்தது * 6015

ஜீ. ஜீக்கு எதிரானது 18284

1965—மொத்த வாக்குகள் 28473

ஜீ. ஜீக்கு கிடைத்தது * 9350

ஜீ. ஜீக்கு எதிரானது 19123

இந்தக் கணக்கிலிருந்து ஜீ. ஜீ. யையும் அவரின் ஒற்றையாட்சிக் கொள்கையையும் எதிர்ப்பவர்களே கூடி வந்திருப்பதைக் காணக் கூடியதாயிருக்கிறது.

ஒவ்வொரு தேர்தலின் போதும் மிகச் சொற்பமானவரே ஜீ. ஜீயை ஆதரித்திருக்கின்றனர். இந்த 6 பொதுத் தேர்தல்களின் போதும் ஜீ. ஜீயை எதிர்த்தவர்களின் விகிதாசாரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1947ல் | $66\frac{1}{3}$ | வீதம் |
| 1952ல் | $56\frac{3}{4}$ | ,, |
| 1956ல் | $74\frac{1}{2}$ | ,, |
| 1960 மார்ச் | $78\frac{1}{4}$ | ,, |
| 1960 ஜூலை | $75\frac{1}{4}$ | ,, |
| 1965 | 68 | ,, |

இந்தப் பட்டியலிலிருந்து மக்கள் காங்கிரசை எதிர்ப்பது தெரிகிறது. அத்துடன் பெரும்பான்மையாக மக்கள் எதிர்க்கும்போது இவர் எப்படி பிரதிநிதித்துவம் வகிக்கலாம் என்றும் ஒரு ஐயம் எழுகிறது; பல கட்சிகளுக்கும் வாக்குகள் பிரிவதனலேயே இந்நிலை ஏற்படுகிறது;

இதே வேளையில் தமிழரசுக் கட்சியின் வாக்கு வீதம் யாழ்ப்பாணம் தொகுதியில் வளர்ந்து வந்திருப்பதைக் கவனிக்கக் கூடியதாயிருக்கிறது.

எனவே இன்றைய தேர்தலில் யாழ்ப்பாணத்தில் சி. எக்ஸ். மார்ட்டின் வெற்றி பெறுவார் என்பது நிச்சயமாகிவிட்டது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 15-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.
ஆசிரியர்: கோவை மகேசன்.